தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, மே 4, திங்கட்கிழமை

சித்திரை 21, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை".

எல்லா உறுப்புக்களும் நிறைந்ததாய் இடையூறுகளுக்கு அஞ்சாததாய் உள்ள வெற்றி தரும் படை, அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சென்னை இராதாகிருஷ்ணன் நகரை ஒட்டியுள்ள பகுதியில் கடலரிப்பு.

567—(* வினா எண். 3182) திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை இராதாகிருஷ்ணன் நகரினை ஒட்டியுள்ள கடற்கரைப் பகுதிகள் அடிக்கடி கடலரிப்பால் பாதிக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கடலரிப்பைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இராயபுரம், காசிமேடு பகுதிகளில் மொத்தம் 1,020 மீட்டர் நீளத்திற்கு கடலரிப்பு ஏற்பட்டிருந்தது. இங்கு பாது காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ. 17.50 இலட்சத்திற்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1987 மே 4]

அரசு அங்கீகாரம் அளித்தது. கற்சுவர் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி முடிக்கப்பட்டுவிட்டது. இதன் மூலம் இராதாகிருஷ்ணன் நகரை ஒட்டியுள்ள பகுதிக்கு பாதுகாப்பு கிடைத்துள்ளது.

திரு. எஸ். வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, இராதாகிருஷ்ணன் நகரிலே பாதிக்கப்பட்ட இடங்களில் குடியிருப்போருக்கு வேறு இடங்கள் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும். இது கடலரிப்பைப் பற்றியதால், கடலரிப்பு பற்றிய விவரம்தான் என்னிடம் இருக்கிறது.

சித்த மருத்துவக் கல்லூரிக்கு அரசு பேருந்து

568—(*வினா எண். 4792) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அரசு பேருந்து கல்வி சுற்றுலா செல்ல வழங்கியும் அதனை மாணவர்கள் பயன்படுத்த முடியாமல் இருக்கும் காரணம் யாது?

(ஆ) அதற்கென மாதம் 250 லிட்டர் டீசல் வழங்கப்படுகிறதா?

(இ) பேருந்து இயங்காத காலத்தில் அப்பணம் எப்படி செலவிடப்படுகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பாளையங்கோட்டையிலுள்ள சித்த மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ள பேருந்து 1985 ஆம் ஆண்டு பழுதடைந்து, பழுதுநீக்க, பணிமனைக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அரசு சுகாதார போக்குவரத்துத் துறை வல்லுநர்கள் பார்வையிட்டு, பேருந்து பயனற்ற நிலையில் உள்ளது என்று சிபாரிசு செய்துள்ளனர்.

(ஆ) ஆம்.

(இ) பேருந்து இயங்காத காலத்தில் அப்பணம் ஒப்புவிப்பு (Surrender) செய்யப்படுகிறது.